# தமிழ் இணையக்கல்விக்கழகம்
## சென்னை – 600 025.

## ஆசிரியர் பட்டயப் பயிற்சி

## *தாள் –1 தமிழ் மொழி கற்றல் கற்பித்தல்*
**முதல் பருவம்**

| நேரடி எழுத்துத் தேர்வு ( OFF – LINE WRITTEN EXAMINATION ) |
|---|

**ஜனவரி–பிப்ரவரி 2025**

**காலம் : 3 மணி நேரம்** **மதிப்பெண்கள் : 75**

(**குறிப்பு:** பிரிவு – 1இல் இருந்து அனைத்து வினாக்களுக்கும் விடை தர வேண்டும். விடை ஒன்றிற்கு ஒரு மதிப்பெண். பிரிவு – 2இல் இருந்து ஐந்து வினாக்களுக்கு விடை தர வேண்டும். ஒவ்வொரு விடையும் ஒரு பத்திக்கு மிகாமல் அமைதல் வேண்டும். விடை ஒன்றிற்கு 3 மதிப்பெண்கள். பிரிவு – 3 இல் இருந்து மூன்று வினாக்களுக்குக் கட்டுரை வடிவில் விடை தர வேண்டும். ஒவ்வொரு விடையும் 3 பக்கங்களுக்கு மிகாமல் அமைதல் வேண்டும். விடை ஒன்றிற்கு 15 மதிப்பெண்கள்)

### பிரிவு – 1

**ஒரு சொல் / தொடரில் விடை தருக.** **(15x1=15)**

1. கலைத்திட்டம் என்ற சொல்லின் பொருள் யாது?
2. முழுமுதல் இலக்கண நூல் ஆசிரியர் யார்?
3. இடைச்சங்கம் உருவான இடம் எது?
4. "வளர்ச்சி" என்பது யாது?
5. கற்றலை எத்துணை வகைகளாக இராபர்ட் எம். காக்னே பிரித்துள்ளார்?
6. உலக சுகாதார அமைப்பு (WHO) கூறியுள்ள வாழ்வியல் திறன்கள் எத்தனை?
7. மொழித்திறன்களில் நான்காவது அமையும் திறன் எது?
8. செவிமடுத்தல் என்பது யாது?
9. பத்து விரிவுரைமுறைகளைக் குறிப்பிடும் இலக்கண நூல் எது?
10. கற்றல் வளர்ச்சியை அறிய உதவும் தேர்வின் பெயர் என்ன?
11. வினாக்களின் வகைகள் யாவை?
12. நுண்ணிலைக் கற்பித்தல் திறனை கூறியவர் பெயர்?
13. மொழி நடை என்பது யாது?
14. செயற்கை கோளின் சிறப்பு யாது?
15. சங்கங்கள் எத்துணை வகைப்படும்?

## பிரிவு – 2

**எவையேனும் ஐந்து வினாக்களுக்கு ஒரு பத்தி அளவில் விடை தருக. (5x3=15)**

1. மொழியின் பன்முக வளர்ச்சி குறித்து எழுதுக.
2. ஏதேனும் மூன்று நீதி நூல்களைக் குறிப்பிடுக.
3. அறிதிறன் வளர்ச்சி என்றால் என்ன?
4. சிந்தனைத்திறன் குறித்து எழுதுக.
5. கேட்டல் திறன் என்றால் என்ன?
6. விளக்குதல் திறனின் உட்கூறுகளை எழுதுக.
7. அடைவு தேர்வு என்றால் என்ன?
8. மொழி ஆசிரியருக்குரிய பண்பு நலன்கள் யாவை?

## பிரிவு – 3

**மூன்று பக்கக் கட்டுரை வடிவில் விடை தருக. (3x15=45)**

1. (அ) சங்க இலக்கிய நூல்கள் உணர்த்தும் வாழ்வியலைக் குறித்துக் கட்டுரை வரைக.

   (அல்லது)

   (ஆ) ஐம்பெரும் காப்பியங்கள் குறித்து விரிவாக விளக்குக.

2. (அ) குழந்தையின் வளர்ச்சி நிலைகள் குறித்து உளவியல் வழி நிறுவுக.

   (அல்லது)

   (ஆ) படித்தல் திறன் என்றால் என்ன? அதன் நோக்கம் தன்மைகள் குறித்து எடுத்துக்காட்டுடன் விளக்குக.

3. (அ) ஏதேனும் ஒரு பாடப்பொருளுக்கு "பாடம் கற்பிப்புத் திட்டம்" (Lesson plan) ஒன்று எழுதுக.

   (அல்லது)

   (ஆ) தேர்வு என்றால் என்ன? தேர்வின் வகைகளைப் பற்றி விரிவாக எழுதுக.

......